දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280
ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவரி ) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ් අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல ) DGHS/COVID-19/2020-347
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

දිනය )
திகதி ) 2021.01.11
Date )

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
Ministry of Health

பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம்
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்.
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
பணிப்பாளர், தேசிய சுகாதார கல்வி நிறுவனம்- களுத்துறை
பிரதான சுகாதார வைத்திய அதிகாரி, கொழும்பு மாநகர சபை
பிராந்திய தொற்றுநோயியலாளர்கள்.
சுகாதார மருத்துவ அதிகாரிகள்.

**தொற்று நோய்த் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவனங்களை மூடுதல் மற்றும் நடமாற்றக் கட்டுப்பாடுகளை விதித்தல்**

1897ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க தொற்று நோய் தடுப்பு கட்டளைச் சட்டமானது தொற்று நோய்களைப் பரவாமல் தடுப்பதற்காக நடமாற்ற கட்டுப்பாடுகளை விதித்தல் மற்றும் நோயுற்ற பிரதேசங்களைப் பிரகடனப்படுத்தல் ஆகியவற்றுக்கான சட்டஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. இச்சட்ட ஏற்பாடுகளை தொற்று நோய்களைப் பரவாமல் தடுப்பதற்காக விஞ்ஞான ரீதியாக பொருத்தமான முறையில் நடைமுறைப் படுத்துதல் மிகவும் முக்கியமானதாகும்.

சில நிறுவனங்கள் விஞ்ஞானரீதியாகப் பொருத்தமற்ற முறையில் மூடப்பட்டும்,சில பிரதேசங்களில் பயணக்கட்டுப்பாடுகள் தன்னிச்சையான முறையில் விதிக்கப்பட்டுமுள்ளதாக பலராலும் எனது கவத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகி உள்ளதோடு மட்டுமல்லாமல் மக்கள் மத்தியில் எதிர்ப்பு மற்றும் ஆட்சேபனைகளை நாம் எதிர்கொள்ள நேரிடும்.கொவிட்-19 நோயைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அத்தியாவசியமானதாகும். பொதுமக்களின் எதிர்ப்பு மனநிலை கொவிட்-19 நோய்க் கட்டுப்பாட்டில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

மேற்படி காரணிகளைக் கருத்தில் கொண்டு நிறுவனங்களை மூடும் மற்றும் நடமாற்ற கட்டுப்பாடுகளை விதிக்கும் போது பின்வரும் நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறு தாங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

1. கொவிட் -19 பரவுவதற்கான வாய்ப்பு இருக்குமாயின் அப்பகுதியை சுகாதார மருத்துவ அதிகாரி தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்தல் வேண்டும்.

2. சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள், சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை கருத்தில் கொண்டு, பயணக் கட்டுப்பாடு அல்லது நிறுவனங்களை மூடுவதற்கு உண்மையான தேவை இருக்கும் போது அதனை பிராந்திய தொற்றுநோயியலாளர் மற்றும் பிராந்திய சுகாதார பணிப்பாளருக்கு அத்தகைய கோரிக்கைக்கு பொருத்தமான தரவுகளுடன் மற்றும் தர்க்கங்களுடன் அறிவித்தல் வேண்டும்.

3. சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பகுதியில் பயணக் கட்டுப்பாடுகளை விதித்தல் அல்லது நிறுவனங்களை மூடுதல் போன்ற கோரிக்கைகளுக்கு சுகாதார மருத்துவ அதிகாரியே பொறுப்பு வாய்ந்த அதிகாரியாவார்

4. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்படி கோரிக்கையை மதிப்பீடு செய்து பயணக் கட்டுப்பாடு விதித்தல் (தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவித்தல்) அல்லது நிறுவனங்களை மூடுவதற்கு உண்மையான தேவை இருக்கும் போது அக் கோரிக்கையை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அத்தகைய கோரிக்கைக்கு பொருத்தமான தரவுகளுடன் மற்றும் தர்க்கங்களுடன் அறிவித்தல் வேண்டும்.

5. கொழும்பு மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரதான சுகாதார வைத்திய அதிகாரியூடாகவும் , தேசிய சுகாதார கல்வி நிறுவனம்- களுத்துறை பிரிவு சுகாதார வைத்திய அதிகாரிகள் தேசிய சுகாதார கல்வி நிறுவன பணிப்பாளர் ஊடாகவும் தமது கோரிக்கைகளை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் தெரிவித்தல் வேண்டும்.

6. 50 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட பணியிடங்களை மூடுவதற்கான கோரிக்கைகள், சுகாதார அமைச்சின் சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளர் அவர்கட்கு (மின்னஞ்சல்: eohunit2020@gmail.com, தொலைநகல்: 0112112704) சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேற்படி கோரிக்கையானது ஆய்வு செய்யப்பட்டு பொருத்தமான கோரிக்கைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்காக முன்மொழியப்படும். **சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி எந்தவொரு நிறுவனமும் மூடப்படலாகாது**, நிறுவனம் ஒன்று தங்களின் சுய தீர்மானத்தில் நிறுவனத்தை தொற்றுநோய் காரணமாக மூடும்போது கூட இவ் நடைமுறை விதிவிலக்காகாது.

7. **சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் முன் அனுமதி பெறப்படாமல்** , தொற்றுநோய்ப் பரவல் அதிகளவில் காணப்படும் மாவட்டத்திலிருந்து குறைந்தளவு தொற்றுநோய்ப் பரவல் காணப்படும் மாவட்டத்திற்கு பயணம் செய்யும் போது **எந்தவொரு நபரும் தனிமைப்படுத்தப்படலாகாது**.

8. சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் 1897 ஆம் ஆண்டின் 03 ஆம் ஆண்டின் தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கை முழுவதற்கும் பொறுப்பான அதிகாரி என்ற வகையில் நோய் நிலையை ஆய்வு செய்து நிறுவனங்களை மூடுதல், தனிமைப்படுத்தல் மற்றும் நடமாற்ற கட்டுப்பாடுகளை விதித்தல் போன்ற அறிவுறுத்தல்களை வழங்குவார்.

மேற்படி அறிவுறுத்தல்களை இறுக்கமாக கடைபிடிக்குமாறு தாங்கள் கோரப்படுவதுடன் நிறுவனங்களை மூடுதல், மாவட்டங்களுக்கிடையில் பிரயாணம் செய்வோரைத் தனிமைப்படுத்தல் மற்றும் நடமாற்ற கட்டுப்பாடுகளை விதித்தல் போன்ற நடவடிக்கைகளை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் முன் அனுமதியைப் பெற்றுகொள்ளாமல் நடைமுறைப்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

Dr. ASELA GUNAWARDENA
Director General of Health Services
Ministry of Health
"Suwasiripaya"
385 Rev. Baddegama Wimalawansa Thero Mw.,
Colombo 10.

வைத்தியர் அசேல குணவர்தன
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
(1897 ஆம் ஆண்டின் 03 ஆம் ஆண்டின தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கை முழுவதற்கும் பொறுப்பான அதிகாரி)

**பிரதிகள்:**

அனைத்து ஆளுநர்கள் -மாகாண சபைகள்
செயலாளர் சுகாதார அமைச்சு
செயலாளர் -அரசநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
மேலதிக செயலாளர் (பொது சுகாதார சேவைகள் ∴ மருத்துவ சேவைகள்)
அனைத்து மாகாண சுகாதார செயலாளர்கள்
தலைவர் கோவிட் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையம் - 19
பொலிஸ் மா அதிபர்
பணிப்பாளர் சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பு
பணிப்பாளர் தனிமைப்படுத்தல்
தலைமை தொற்றுநோயியல் நிபுணர்
பணிப்பாளர் நாயகம் இலங்கை முதலீட்டுச் சபை